# அன்பு

அன்பு உயிர்களின் உயரிய பண்பு. இது எல்லோரையும் உறவுகளாக இணைக்கும். அன்பு மூன்று எழுத்துகளால் ஆனது; அதிக பலம் கொண்டது; அன்பு உலகையே கட்டியாளும்.

எம்மீது முதலில் அன்பு செலுத்துகிறவர் எம் அன்னை. இதனால் தானோ உலகிலுள்ள உயிரினங்கள் தாயிடம் அதிக அன்பு காட்டுகின்றன.

நாம் அன்பை வார்த்தைகளால் தெரிவிக்கலாம்; பரிசுகள் கொடுத்தும் உதவிகள் செய்தும் வெளிப்படுத்தலாம். எம்மை எங்கும், எப்போதும் ஏற்றம் பெற வைப்பது அன்பே! இத்தகைய அன்பிற்காக ஏங்குவோர் எத்தனை பேர்?

சிறுவர்களாகிய நாமும் எல்லோரிடமும் அன்பாகப் பழக வேண்டும். அன்பாய்ப் பழகும் பண்புடையவர்கள் என்றும் மகிழ்ச்சியாக இருப்பர், அச்சமின்றி வாழ்வர். நாம் அடுத்தவரிடம் அன்பு செலுத்தும் போது உலகமே அன்பு மயமாகத் தோன்றும்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்"

நன்றி.
வணக்கம்.

குறிப்பு: அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது. அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களைத் தயார்படுத்துவது பெற்றோரின் கடமை. வளாகத்தில் இறுதிப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் மூவர் தேசிய மட்டத்திலான "அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2020" இல் கலந்து கொள்வார்கள்.

---

**நல்லொழுக்கம்**

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

ஆமாம்! ஒழுக்கத்தால் மட்டுமே சிறப்பு நமக்கு வந்து சேரும். ஒழுக்கத்தை உயிராக, உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும். நாள்தோறும் வீட்டில் பெற்றோர்களும், பள்ளிகளில் ஆசிரியர்களும் எமக்கு நல்லொழுக்கங்களைச் சொல்லித் தருகின்றார்கள்.

ஒருவனது சீரிய வாழ்வுக்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே என்றால் மிகை ஆகாது! ஒருவருக்குப் பல்வேறு திறமைகள் இருக்கலாம், ஆனால் அவரிடம் ஒழுக்கம் இல்லை என்றால் எதுவுமே இல்லை.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல், தீய சொற்களைப் பேசாதிருத்தல், பெரியோரை மதித்து நடத்தல், பிறருக்கு உதவுதல், அறத்தின்வழி பொருள் சேர்த்து மகிழ்ந்து வாழ்தல் போன்றன சில நற்பழக்க வழக்கங்கள் ஆகும். சிறு பருவம் முதற்கொண்டு நாம் நற்பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.

மாணவர்கள் ஆகிய நாம் நல்லொழுக்கத்தைப் பேணி, உயர்வடைவதையே நமது குறிக்கோளாகக் கொள்வோம்!

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்!

நன்றி.
வணக்கம்.

அன்னைத் தமிழ்முற்றப் போட்டிகள்

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - வைத்வெத்வளாகம் வளாகம்

16வது ஆண்டு கல்வியியற் போட்டிகள் 2020 - ஆண்டு 2011 (வளர்நிலை 3)

தெரிவுப்போட்டி: 08.02.20 இறுதிப்போட்டி:15.02.20

---

## தமிழ் எங்கள் தாய்மொழி

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று, சங்கே முழங்கு!"

உலகில் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் எங்கள் தாய்மொழியாம் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய மூத்தமொழி.

ஆம்! தமிழ் உலகம் முழுவதும் அறியப்பட்ட செம்மொழி அல்லவா? செம்மொழியாம் தமிழ்மொழி எமது தாய்மொழி என்று சொல்வதில் நாம் பெருமை கொள்ளல் வேண்டும்.

ஒவ்வோர் இனமும் தமக்கென ஒரு மொழியைக் கொண்டிருப்பர். அதுவே அவர்களது தாய்மொழி. தாய்மொழி என்பது உணர்வோடு ஒட்டிய சிந்தனை மொழி.

«யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம்»

என்று பாரதியார்கூறினார்.

தொன்மையும் இனிமையும் உடைய தமிழ்மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். ஆம்! அழகும் வளமும் நிறைந்த தமிழைக் கற்றால் நம் அறிவு வளரும்! ஆற்றல் பெருகும்! எம் இனத்துக்கு அடையாளமிட்டு நிற்பது எமது தாய்மொழி. எம்மைத் தமிழராக இனங்காட்டி நிற்கும் எம் தமிழைக் கற்போம்! தமிழை வளர்ப்போம்! தமிழில் தினமும் பேசுவோம்.

«தமிழா! நீ தமிழ் வாழப்பணியாற்று

தமிழல்லவா உனை இனங்காட்டும் உயிர்க்காற்று»

நன்றி.

வணக்கம்.

---

# தாய்நாட்டுப்பற்று

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ
வானினும் நனி சிறந்தனவே"

ஆம்! எம்மைப் பெற்ற தாயை நாம் நேசிக்கின்றோம் அதுபோல். நாம் யாவரும் உரிமை பாராட்டிட ஒரு தாய் உள்ளாள். அவள் தான் நம் அன்னை பூமி. எமக்கே உரித்தான எம் தாய்நாட்டை நாம் அனைவரும் உரிமையோடு பாதுகாத்திடல் வேண்டுமல்லவா?

எமது தாய் நாட்டிலேயே எம் முன்னோர் வாழ்ந்தனர்; எமது பெற்றோர் அங்குதான் பிறந்தனர்; எமது உறவினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே, எம் தாய்நாட்டில் பற்றும் பாசமும் கொள்வது எமது தலையாய கடமை. இதனையே தாய்நாட்டுப்பற்று, தேசபற்று என்றெல்லாம் கூறுவர். நாடு செழிக்க எம் வாழ்க்கை சிறக்கும். இதனை உணர்ந்து நாம் அனைவரும் தேசிய உணர்வுடன் வாழவேண்டும். தமிழ்மொழியைத் தாய்மொழியாய் கொண்ட நாம் ஒருதாய் மக்களென்ற உணர்வோடு ஒற்றுமையாய் வாழ்வதே நன்று. இதுவே, நம் தாய்நாட்டின் மீது பற்றுடையோம் என்பதற்குச் சான்று.

உலகம் முழுவதும் பெரும்பான்மை குமுகாயம், சிறுபான்மை குமுகாயத்தை அடக்கி ஆள முயல்கிறது. இதில் இருந்து அடக்கப்படும் இனம் தன் வலிமையைப் பயன்படுத்தி விடுபட முயல்கிறது. இவ்வாறே, எம் தாயகமும் இன்று அடக்கு முறைக்கு எதிராகப் பல வழிகளிலும் போராடிக் கொண்டிருக்கிறது. வேதனைகளிலும் பல சாதனைகள்! எத்தனை தியாகங்கள்! எமது தாய்நாட்டின் விடுதலைக்காக, தம் உயிர்களை நீத்த நம் மாவீரர்களது தாய்நாட்டுப் பற்றினை நாம் நன்கு அறிவோம். இத்தகைய தியாகசீலரை மனத்தில் இருத்தி, நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தாய்நாட்டுப்பற்றுடன் தமிழர் என்ற அடையாளத்துடன் வாழ்வோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்!

வாழ்க தாய்நாடு! வளர்க நாட்டுப்பற்று!
நன்றி.
வணக்கம்.

அன்னைத் தமிழ்முற்றப் போட்டிகள்

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - வைத்வெத் வளாகம்

16வது ஆண்டு கல்வியியற் போட்டிகள் 2020 - ஆண்டு 2009 (**வளர்நிலை 5)**

தெரிவுப்போட்டி: 08.02.20 இறுதிப்போட்டி:15.02.20

---

# அன்னை பூபதி

அன்னை பூபதி தாய்க்குலத்தின் தலைவியாய், பெண்குலத்திற்கே கோபுரக்கலசமாய் திகழ்ந்தவர். மீன்பாடும் மட்டுநகரின் ஆரையம்பதியிலே அன்னை பூபதி பிறந்தார். மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராகச் செயற்பட்டவர்.

இந்தியப்படைகள் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அப்பொழுது, இந்தியப்படை உடனடியாகப் போரை நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தி அன்னை பூபதி அவர்கள் 19.03.1988 அன்று தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஆனால் இந்திய அரசு அன்னையின் சாத்வீகப் போராட்டத்தைக் கவனத்திற் கொள்ளவில்லை. அவரின் கோரிக்கைகளையும் செவிசாய்க்கவில்லை. மாறாக இந்தியப்படைகள் தமிழர் நிலப்பரப்பைச் சுடுகாடாக்கியது. இறுதியில் காந்தி தேசம் 19.04.1988 அன்று அன்னையின் உயிரைப் பறித்தது.

அன்னை, தமிழ் இனத்தின் விடிவிற்காகவும், இராணுவத்திற்கு எதிராகவும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்திய பெருமைக்குரியவர். ஒரு குடும்பப்பெண், தனது வாழ்வைத் துறந்து, தனது இனத்திற்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்று கூறின் மிகையாகாது! குடும்பத் தலைவியான இவர் தன்னைத் தன் மக்களுக்காகத் தற்கொடையாக்கிய செயல், ஒரு வரலாற்று நிகழ்வு.

எம் சுதந்திர வாழ்விற்காகத் தன் வாழ்வைச் சுருக்கிக்கொண்ட அன்னையின் தியாகம் நாட்டுப்பற்றாளர் தினம் என்று தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப் படுத்தப்பட்டது.

தமிழினம் வாழத் தன் இன்னுயிர் ஈந்த அன்னையின் பெயரால், நோர்வேயில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் கிளை பரப்பி பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இத் தமிழ்க்கலைக்கூடம் மொழி, கலை, பண்பாடு, தேசப்பற்று, விளையாட்டு என அனைத்தையும் வழங்கிடும் கற்பகதருவாக விளங்குகின்றது. அன்னையின் தியாகம் எம் மனதை விட்டு என்றுமே அகலாது.

நன்றி.
வணக்கம்.

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
அன்னைத் தமிழ்முற்றப் போட்டிகள் 2020
**திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி ஆண்டு 4**
**தெரிவுப்போட்டி: 14.03.20 இறுதிப்போட்டி : 21.03.20 வைத்வெத் வளாகம்**

# அதிகாரம் - ஒழுக்கமுடைமை

1. குறள்: ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

2. **குறள்:** பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை

3. **குறள்:** ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

4. **குறள்:** மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

5. **குறள்:** அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
அன்னைத் தமிழ்முற்றப் போட்டிகள் 2020
திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி ஆண்டு 5
தெரிவுப்போட்டி:14.03.20 இறுதிப்போட்டி:21.03.20

# அதிகாரம் - ஒழுக்கமுடைமை

1. **குறள்:** ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து

2. **குறள்:** ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

3. **குறள்:** நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

4. **குறள்:** ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

5. **குறள்:** உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - றொம்மன் வளாகம்

திருக்குறள் மனனம் ஒப்பித்தல் ஆண்டு 6

தெரிவுப்போட்டி:14.03.20 இறுதித்தெரிவு:21.03.20

வைத்வெத் வளாகம்

# அதிகாரம் - வாய்மை

1. குறள்: வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

2. குறள்: பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

3. குறள்: தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

4. குறள்: உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

5. குறள்: மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தோடு
தானஞ்செய் வாரின் தலை.

6. குறள்: பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

7. குறள்: பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

8. குறள்: புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்

**அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 2020**

திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி ஆண்டு 7

தெரிவுப்போட்டி 14.03.20 இறுதிப்போட்டி:21.03.20 வைத்வெத்வளாகம்

# அதிகாரம் - நட்புடைமை

1. **குறள்:** செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு

2. **குறள்:** நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு

3. **குறள்:** நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

4. **குறள்:** நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

5. **குறள்:** புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

6. **குறள்:** முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

7. **குறள்:** அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு

8. **குறள்:** உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு